இரண்டு ரெய்டுகளுக்குப் பயந்துபோய் அ.தி.மு.க.வை அமித்ஷாவிடம் அடமானம் வைத்தவர்!

'சிறப்பான ஆட்சியைக் கொடுத்தோம்' என முழு பூசணிக்காயை சோற்றுக்குள் மறைத்திருக்கிறார் பழனிசாமி!

அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

சென்னை, டிச. 12- இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

10 தேர்தல்களில் தொடர்ந்து தோற்றுக் கொண்டிருக்கும் 'தோல்விசாமி', "210 தொகுதிகளில் அ.தி.மு.க. வெல்லும்'' என அ.தி.மு.க. பொதுக்குழுவில் கிச்சு மூச்சு மூட்டியிருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர். குழந்தைகளைச் சிரிக்க வைப்பதற்காகக் கிச்சு மூச்சு மூட்டுவது போல அதி.மு.க.வினருக்கு உற்சாக மூட்டச் சிரிக்காமல் பொய்யை சொல்லியிருக்கிறார் பழனிசாமி.

எத்தனை எத்தனை கொடுமைகள்!

"தி.மு.க. நம் ஆட்சியைப் பற்றி விமர்சிக்க முடியவில்லை. அ.தி.மு.க. பாஜகவோடு கூட்டணி என்றுதான் சொல்கிறார். அப்படியான சிறப்பான ஆட்சியைக் கொடுத்தோம்'' என தன்னுடைய ஆட்சிக்குத் தானே பொதுக்குழுவில் சான்றிதழ் கொடுத்திருக்கிறார் பழனிசாமி. ஆட்சிக்கு ஆபத்தைத் தடுக்கத் தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ-க்கள் 18 பேர் தகுதி நீக்கம், பத்திரிகையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், எதிர்க் கட்சியினர் மீது அவதூறு வழக்குகள், விவசாயிகள் மீது அடக்குமுறை, கொடநாடு கொலைகள், போலீஸ் அதிகாரி விஷ்ணு பிரியா தற்கொலை, கனிமக் கொள்ளைகள், கஜா, ஓகி புயல்களில் காட்டிய மெத்தனம், கூவத்தூர் கூத்துகள், கொரோனா மரணங்கள், கொரோனா பேரிடரிலும் கொள்ளை, சாத்தான்குளம் தந்தை மகன் லாக் அப் டெத், தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு, கல்லூரி மாணவிகளைத் தவறான வழிக்குத் தூண்டிய பேராசிரியை நிர்மலாதேவி விவகாரம், பொள்ளாச்சி பாலியல் வன்முறைகள், நுங்கம்பாக்கம் ரயில்வே ஸ்டேஷனில் சுவாதி கொலை, அ.தி.மு.க. பேனர் மரணங்கள், ஜல்லிக்கட்டு தடை போராட்டம், சிறுபான்மை மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் என எத்தனை எத்தனை கொடுமைகள் நடைபெற்றன. இதையெல்லாம் மறைத்துவிட்டு, 'சிறப்பான ஆட்சியைக் கொடுத்தோம்' எனச் சோற்றுக்குள் பூசணிக்காயை மறைத்திருக்கிறார் பழனிசாமி.

பழனிசாமி சொல்வது போலவே அது சிறப்பான ஆட்சி என்றால், 2021 சட்டமன்றத் தேர்தலில் அதி.மு.க.வை மக்கள் ஏன் வீட்டுக்கு அனுப்பினார்கள்? தமிழ்நாட்டின் வளர்ச்சியை முடக்கி தமிழ்நாட்டைக் கற்காலத்திற்கு இழுத்துச் சென்ற ஆட்சிதான் பழனிசாமியின் ஆட்சி. அது பொற்கால ஆட்சி அல்ல. தமிழ்நாட்டின் இருண்டகால ஆட்சி. மாநிலத்தின் உரிமைகளை எல்லாம் டெல்லியின் காலடியில் அடமானம் வைத்துவிட்டு, நமது பொருளாதார வளத்தைச் சுரண்டும் திட்டங்களுக்கும் சட்டங்களுக்கும் தலையாட்டி கையெழுத்திட்டு துரோகம் செய்ததுதான் பழனிசாமியின் துரோக ஆட்சி.

வெட்கப்பட வேண்டும்!

தமிழ்நாட்டின் உரிமைகளை மறுத்தும், நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டியும், வளர்ச்சித் திட்டங்களை முடக்கியும், தமிழர் பண்பாட்டை உலகறிய செய்யும் கீழடி அகழாய்வு முடிவை மறுத்ததும் மட்டுமின்றி தமிழர்களை திருடர்கள் என்றும் கொடுமைக்காரர்கள் என்றும் தங்கள் அரசியல் ஆதாயத்திற்காக ஒடிசா, பீகார் தேர்தல் போது விமர்சித்துப் பேசிய பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்துக் கொண்டு இருப்பதற்கு பழனிசாமி பெருமைப்படக் கூடாது. வெட்கப்படதான் வேண்டும்.

அதேபோல மகளிர் விடியல் பேருந்தில் நமது பெண்கள் பயணிப்பதை பொறுத்துக் கொள்ள முடியாமல் லிபஸ்டிக் பஸ் என பெண்களை அவமதிக்கும் வகையில் அநாகரீகமாக நடந்து கொண்ட பழனிசாமி இன்று பெண்களின் நலத்திட்டங்களுக்காக குரல் கொடுத்தேன் என நாடகமாடி உள்ளார். திராவிட மாடல் ஆட்சியில் பெண்களுக்கு கொடுக்கப்பட்டு வரும் உரிமை தொகை, விடியல் பயணம், புதுமைபெண் போன்ற திட்டங்களைக் கண்டு தாங்கி கொள்ள முடியாத முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் சிவி சண்முகம் "பொண்டாட்டியையும் இலவசமாக கொடுப்பார்கள்" என சொல்லி ஒட்டு மொத்த தமிழ்நாட்டு பெண்களையும் கொச்சைப்படுத்தி பேசினாரே அதை பெயரளவுக்காவது கண்டித்தாரா பழனிசாமி.? இந்த லட்சணத்தில் பெண்களுக்கு ஆதரவாக அ.தி.மு.க. இருப்பது போல பகல் வேஷம் போடுகிறார் பழனிசாமி.

தமிழ்நாட்டை சீரழித்த பழனிசாமி!

மேலும், அரைத்த மாவை அரைப்பது போல் பேசிய பொய்களையே பொதுக்குழுவிலும் திரும்பப் பேசியிருக்கிறார் பழனிசாமி. கூவத்தூரில் குறுக்கு வழியில் முதலமைச்சராக ஊர்ந்தெடுக்கப்பட்ட பழனிசாமியால் தமிழ்நாடு அனைத்துத் துறைகளில் படுபாதாளத்திற்குச் சென்றது. தொட்டத் துறைதோறும் ஊழல், கொடநாடு தொடங்கி தூத்துக்குடி வரை சீரழிந்து கிடந்த சட்டம் ஒழுங்கு, பாஜகவின் கண்ணசைவிற்கு இசைந்து நடந்து தமிழ்நாட்டின் உரிமைகள் தாரை வார்ப்பு, அடிமை அ.தி.மு.க. ஆட்சியின் அவலட்சணங்களை எதிர்த்துப் போராடியவர்கள் மீது குண்டர் சட்டம் முதல் துப்பாக்கிச் சூடு வரை நடத்தி அடக்குமுறை, செய்தி நிறுவனங்கள் மீது அவதூறு வழக்குகள் எனத் தமிழ்நாட்டைச் சீரழித்த பழனிசாமியை மக்கள் அவ்வளவு எளிதில் மறந்துவிடவில்லை. அதனால்தான் மக்கள் தொடர்ந்து 10 தேர்தல்களில் அவரை தோற்கடித்துக் கொண்டே இருக்கிறார்கள். தமிழ்நாட்டைத் தலைநிமிர வைத்திருக்கும் திராவிட மாடல் அரசின் சாதனைகளைப் பொறுக்க முடியாமல் பொதுக்குழுக் கூட்டம் கூட்டிப் பொருமியிருக்கிறார். பழனிசாமியின் அர்த்தமற்ற அவதூறுகளால் தி.மு.க.வை அசைத்துக் கூட பார்க்க முடியாது. இனியும் இந்தப் பொய்கள் மக்களிடம் எடுபடும் என நினைத்து பகல் கனவில் மிதந்து கொண்டிருக்கிறார்.

பொதுக்குழுவில் புலம்பல்!

"நாட்டு மக்களுக்காகச் சூழ்நிலை கருதி பா.ஜ.க-வுடன் கூட்டணி வைத்தோம். பா.ஜ.க-வுடன் இனி கூட்டணி இல்லை'' என்று 2024 ஆம் ஆண்டு ஜனவரியில் மதுரையில் நடந்த SDPI கட்சி மாநாட்டில் வீர வசனம் பேசிய பழனிசாமி, மீண்டும் பாஜகவுடன் கூட்டணி வைத்துக் கொண்டு அதற்கு நியாயம் கற்பிக்கப் பொதுக்குழுவில் புலம்புவதைப் பார்த்தால் சிரிப்புதான் வருகிறது.

"அடுத்த 100 நாட்களில் தி.மு.க. அமைச்சர்கள் பத்திரமான இடத்துக்குப் போவார்கள்'' என ஜோதிடம் சொல்லியிருக்கிறார் பழனிசாமி. தன்னுடைய உறவினர்கள் வீட்டில் நடந்த இரண்டு ரெய்டுகளுக்குப் பயந்து போய் அதி.மு.க.வை அமித்ஷாவிடம் பத்திரமாக அடமானம் வைத்த பழனிசாமி எல்லாம் பேசுவதற்கு அருகதை இருக்கிறதா?

செந்தில் காமெடி போல் பேசியிருக்கிறார்!

"2019 எம்பி தேர்தலில் 39 நாடாளுமன்றத் தொகுதியில் ஒன்றில் தான் வென்றோம். அப்போது நடந்த 22 சட்டமன்றத் தொகுதிகள் இடைத் தேர்தலில் 9 இடங்களில் வென்றோம்'' என புள்ளிவிவரம் சொல்கிறார் பழனிசாமி. தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ-களால் ஆட்சிக்கு ஆபத்து என்றதும் அவர்களைத் தகுதிநீக்கம் செய்தார்கள். அந்தத் தொகுதிகளுக்கும் சேர்த்து அப்போது இடைத் தேர்தல் நடைபெற்றது. அறுதிப் பெரும்பான்மையை இழந்துவிடுவோமோ, ஆட்சி கவிழ்ந்துவிடுவோமோ என அஞ்சி அந்த 9 தொகுதிகளில் மட்டுமே குறியாக வேலை பார்த்து வென்றார்கள். ''நான் ஏழாவது பாஸ்னே. நீங்க எஸ்.எஸ்.எல்.சி ஃபெயிலுனே. பாஸ் பெருசா ஃபெயில் பெருசா'' என செந்தில் காமெடி போலப் பேசியிருக்கிறார் பழனிசாமி.

அ.தி.மு.க.வினரே நம்ப மாட்டார்கள்!

"2024 நாடாளுமன்றத் தேர்தலில் 39 நாடாளுமன்றத் தொகுதிகளை தி.மு.க.தான் வென்றது. ஆனால், நாடாளுமன்றத் தொகுதிக்குள் இருக்கும் 10 சட்டமன்றத் தொகுதிகளில் அதி.மு.க.வே அதிக வாக்குகள் பெற்றது. அப்போது அ.தி.மு.க. மற்றும் பாஜக கூட்டணி வாங்கிய வாக்குகள் இரண்டையும் சேர்த்தால் 41.33 சதவிகிதம். எனவே, வருகிற தேர்தலில் 210 இடங்களில் அ.தி.மு.க. கூட்டணி வெல்லும்'' என அரித்மெட்டிக் கணக்கு போட்டிருக்கிறார் பழனிசாமி.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக, அ.தி.மு.க. தனித் தனியாகக் கூட்டணி அமைத்து போட்டியிட்டது. பாஜக கூட்டணியில் பாமக, அமமுக, பன்னீர்செல்வம், தமாகா, புதிய நீதிக் கட்சி, ஐ.ஜே.கே, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் போன்ற கட்சிகள் இடம்பெற்றன. இப்போது அ.தி.மு.க. கூட்டணியில் பாஜக, தமாகா தவிர வேறு எந்தக் கட்சிகள் இருக்கின்றன? அன்றைக்கு அ.தி.மு.க. கூட்டணியில் இருந்த எஸ்.டி.பி.ஐ விலகிவிட்டது. தேமுதிகவின் நிலை உறுதியாக வில்லை. அதுமட்டுமின்றி 2024 நாடாளுமன்ற தேர்தலில் பாஜகவோடு கூட்டு சேர்ந்து அ.தி.மு.க. நின்றிருந்தாலும் தி.மு.க. கூட்டணியை வென்றிருக்க முடியாது. இனியும் வெல்ல முடியாது என்பது தமிழ்நாட்டில் நேற்று பிறந்த பிஞ்சுக் குழந்தைக்குக் கூட தெரியும். நிலைமை இப்படியிருக்க நீங்கள் அடித்து விடும் பொய்க்கணக்கை அ.தி.மு.க. வினரே நம்பமாட்டார்கள் பழனிசாமி.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டம் அரியலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய பார்வையாளர்களுடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் "என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி" கூட்டத்தினை சிறப்பாக நடத்துவது குறித்தும், எதிர்வரும் 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, நம் கழகத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி செயல்பட்டு 2026ல் மாபெரும் வெற்றி குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் கலந்தாலோசனைகள் வழங்கி உரையாற்றினார். உடன் அரியலூர் சட்டமன்ற தேர்தல் பொறுப்பாளர் அன்பரசன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சந்திரசேகரன், லதாபாலு, ஒன்றிய கழக பொறுப்பாள் இரா.கென்னடி, நகர செயலாளர் இரா.முருகேசன், ஒன்றிய கழக செயலாளர்கள் கோ.அறிவழகன், மா.அன்பழகன், ரெ.அசோகசக்ரவர்த்தி, தனவேல், தெய்வ.இளையராஜா, இரா.அண்ணாதுரை, ஏ.ஜி.எஸ்.அருண், ஒன்றிய தேர்தல் பொறுப்பாளர்கள் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

நீலகிரி - பந்தலூர் வட்டத்தில்

புதிய வட்டச் செயல்முறை கிடங்கு வளாகம்!

கா.ராமச்சந்திரன் - முன்னணியினர் பங்கேற்பு!

நீலகிரி, டிச. 12- முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களால் சென்னை, தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளிகாட்சி வாயிலாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நீலகிரி மாவட்டம் - பந்தலூர் வட்டத்தில் 2500 மெட்ரிக் டன் கொள்ளளவில் ரூ.450 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய வட்ட செயல்முறை கிடங்கு வளாகத்தை திறந்து வைத்ததனை தொடர்ந்து அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

உடன் நுகர் பொருள் வாணிப கழகத்தின் மண்டல செயலாளர் கௌரிமணவாளன்,கூடலூர் கோட்டாட்சியர் குணசேகரன், பந்தலூர் வட்டாட்சியர் சர்புதீன் நிஷா, ஆணையாளர் சக்திவேல், மற்றும் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளரும் கூடலூர் தொகுதி பார்வையாளர் பரமேஷ் குமார், செயற்குழு உறுப்பினர்கள் மு.திராவிட மணி, எஸ். காசிலிங்கம், நெல்லியாளம் நகரமன்றத் தலைவி சிவகாமி, துணைத் தலைவர் நாகராஜ், மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் ராஜேந்திரன், பந்தலூர் நகரச் செயலாளர் சேகரன், துணைச் செயலாளர் சிவசுப்பிரமணி, பொருளாளர் தென்னரசு, பந்தலூர் மத்திய ஒன்றிய செயலாளர் மாங்கோடு ராஜா, கூடலூர் நகர செயலாளர் இளஞ்செழியன் பாபு, கூடலூர் ஒன்றிய செயலாளர் உத்தமன், மாவட்ட பிரதிநிதிகள் குமார் நாகராஜ், கணபதி, சந்துரு, துணைச் செயலாளர் பாக்கியநாதன், அவைத் தலைவர் கோபால கிருஷ்ணன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆலன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முரளிதரன், மகளிர் அணி துணை அமைப்பாளர் வெண்ணிலா, உட்பட அணைகளின் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் அரசுத் துறை அதிகாரிகள், பத்திரிக்கை நண்பர்கள் பலர் உடன் இருந்தனர்.

முரசொலி முதுநிலை

பிழைதிருத்துநர் ஜெ.டி.அரசு மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, டிச.12- முரசொலி நாளிதழில் ஆசிரியர் பிரிவில் முதுநிலை பிழைதிருத்துநராக பணிபுரிந்து வந்த ஜெ.டி. அரசு அவர்கள்உடல்நலக் குறைவால் நேற்று முன்தினம் (10.12.2025) இரவு 10.30 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது இல்லம் பெருங்களத்தூரில் 7/12, ராமதாஸ் தெருவில் உள்ளது.

முரசொலி நாளிதழில் 01.04.1980 ஆம் ஆண்டு முதல் பிழைதிருத்துநர் பிரிவில் 40 வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற பிறகும் தொடர்ந்து ஆசிரியர் பிரிவில் முதுநிலை பிழைதிருத்துநராக பணியாற்றி வந்தார். 21.12.2021 அன்று திடீரென மூளையில் ஏற்பட்ட ரத்தக் கசிவால் உடல்நலக் குறைவு ஏற்பட்டு கைகால் செயலிழந்து சிகிச்சை பெற்று வந்தார் ஜெ.டி.அரசு அவர்கள்.

இவருடைய தந்தை சி.என்.ஜெயவேல் அவர்கள் முரசொலி நாளிதழில் 15 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து கழகத்தினர், முரசொலி அலுவலர்கள் அஞ்சலி செலுத்தினர்.

அமைச்சர் சிவ.வீ மெய்யநாதன் தலைமை! குத்தாலத்தில் ரூ.2.96 கோடியில்

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி புதிய பேருந்து நிலையம் கட்டுமானப் பணி!

அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டினார்! நிவேதா முருகன் எம்.எல்.ஏ.

- எம். பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. –குத்தாலம் பி.கல்யாணம் பங்கேற்பு!

மயிலாடுதுறை, டிச.12 - மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் பேரூராட்சியில், ரூ.2.96 கோடி மதிப்பீட்டில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி புதிய பேருந்து நிலையம் கட்டுமானப் பணிகளுக்கு, அடிக்கல் நாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமை தாங்கினார்., மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பூங்கொடி ஆகியோர்முன்னிலைவகித்தனர்

நிகழ்ச்சியில்நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் .கே.என்.நேரு கலந்து கொண்டு குத்தாலம் பேரூராட்சியில், ரூ.2.96 கோடி மதிப்பீட்டில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி புதிய பேருந்து நிலையம் கட்டுமானப் பணிகளுக்கு, அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்து பேசுகையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், குத்தாலம் பேரூராட்சியில், ரூ.2.96 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுடன், தமிழ்நாட்டில் உள்ள 479 பேரூராட்சிகளிலும், கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 100க்கும் மேற்பட்ட பேரூராட்சிகளில் தலா ரூ.20 கோடி மதிப்பீட்டில் அந்தந்த பேரூராட்சியிலும் ஆழ்குழாய் அமைத்து, நீர்த்தேக்கத் தொட்டி மூலம் பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் 20 க்கும் மேற்பட்ட இடங்களில் புதிய பேருந்து நிலையம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், பழைய பேருந்து நிலையங்களை புதுப்பித்தல், புதிதாக மார்க்கெட் அமைத்தல், சாலை வசதிகள் ஏற்படுத்துதல், தெருவிளக்குகள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள 479 பேரூராட்சிகளுக்கும், இவ்வாண்டு ரூ.3800 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். தமிழ்நாட்டில் 158 நகராட்சிகளில் பேருந்து நிலையங்கள், மார்க்கெட்டுகள், கழிவறைகள் கட்டுமானப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. நகராட்சி மற்றும் பேரூராட்சிகள் சேர்த்து சுமார் 17000 கி.மீ நீளத்திற்கு சாலைப் பணிகள் மேற்கொள்ளபட்டுள்ளன. முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1972 இல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடங்கப்பட்டு, கடந்த 50 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 4.28 கோடி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது முதலமைச்சர் அவர்கள் ஆட்சி காலத்தில், 1.30 கோடி மக்களுக்கு புதிதாக பாதுகாக்கப்பட்ட குடிநீர வழங்கப்பட்டுள்ளது மேலும் 78 இலட்சம் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணிகள் நிறைவு பெற்றவுடன் தமிழ்நாட்டில் 6 கோடி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டிருக்கும்.

தமிழ்நாட்டில் மதுரை, கோவை, திருச்சி, சென்னை, இராமநாதபுரம், திண்டுக்கல், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கூட்டுக்குடிநீர் திட்டம் செயலபடுத்தப்பட்டு வருகிறது. ஒகேனக்கல் பகுதி கூட்டு குடிநீர் திட்டம் ஆகியவற்றிற்கு திட்ட அறிக்கை பரிசீலனையில் உள்ளது அந்த திட்டங்களும் நிறைவேற்றப்பட்டால் தமிழ்நாட்டில் 100 சதவீதம் கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டுவிடும்.

இத்துறையில் ஆண்டுக்கு ரூ.25,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ.17,000 கோடி வளர்ச்சி திட்டங்களுக்காக செயல்படுத்தப்படுகிறது. அதுபோக நபார்டு மற்றும் ஜப்பான் வங்கிகள் மூலம் கடன் பெற்று பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குத்தாலத்தில் புதிய பேருந்து நிலையம் கட்டுமான பணிகளுக்காக அடிக்கல் நாட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். குத்தாலம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலை பணிகள், பள்ளி மேம்பாடு, நவீன எரிவாயு தகனமேடை, புதிய வணிக வளாகங்கள் கட்டுதல், புதிய பாலம் கட்டுதல், குளங்கள் பராமரிப்பு, நாய் கருத்தடை மையம் கட்டுதல் என ரூ.36 கோடியே 18 இலட்சத்து 85 ஆயிரம் மதிப்பீட்டில் வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் நகராட்சி மற்றும் பேரூராட்ச்சிகள் துறைகள் மூலம் ஆண்டுக்கு 1 இலட்சம் வீடுகள் கட்டப்படுகின்றன. ஒருங்கிணைந்த உள்ளாட்சி துறைக்கு ஆண்டுக்கு 51 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்வதுடன், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் கோரிக்கைகளை உடனடியாக முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி தருகிறார்கள்.

அடிக்கல் நாட்டப்பட்டுள்ள குத்தாலம் பேருந்துநிலைய கட்டுமான பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் இவ்வாறு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், கழக விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜெக. வீரபாண்டியன், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட கழக துணை செயலாளர் மு.ஞானவேல், மாவட்ட கழக பொருளார் மகா. அலெக்சாண்டர், ஒன்றிய கழக செயலாளர் மூவலூர் எம். மூர்த்தி, என். இளைய பெருமாள், மங்கை எம்.சங்கர், கு. வைத்தியநாதன், ப.முருகமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், குத்தாலம் பேரூர் கழக செயலாளர் எம். சம்சுதீன், மாவட்ட சார்பானிகளின் அமைப்பாளர்கள் இரா. மனோகரன், க.அறிவுச் செல்வன், அரசு வழக்கறிஞர் இராம. சேயோன், மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், குத்தாலம் பேரூராட்சி மன்ற தலைவர் சங்கீதா மாரியப்பன், தலைமைக் கழக பேச்சாளர் கோமல் விஜய், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கோசி.மதி. திருமாவளவன், சௌ.சர்வோதயன், மாவட்ட இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் க.சுரேஷ், பேரூராட்சிகள் உதவி இயக்குனர் மாஹீன்அபுக்கர், குத்தாலம் பேரூராட்சி செயல அலுவலர் இராஜா, குத்தாலம் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

தமிழ்நாடு துணை முதலமைச்சரும்,கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஆலோசனையின்படி, நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் எற்பாட்டில் சேந்தமங்கலம் பேரூர் கழக நிர்வாகிகளுக்கு பேரூர் கழக செயலாளர் நா.தனபாலன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார் கலந்து கொண்டு கழகத்தின் இருவண்ண கருப்பு சிவப்பு வேஷ்டி , சேலை, சட்டை ஆகியவற்றை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மா.கார்த்திக், வார்டு கழக செயலாளர்கள் சரவணன், குமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை, தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளிகாட்சி வாயிலாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நீலகிரி மாவட்டம் – பந்தலூர் வட்டத்தில் 2500 மெட்ரிக் டன் கொள்ளளவில் ரூ.450 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய வட்ட செயல்முறை கிடங்கு வளாகத்தை திறந்து வைத்ததனை தொடர்ந்து அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் குத்து விளக்கு ஏற்றிவைத்து பார்வையிட்டார்.